செ.வெ.எண் : 01 /ஆகஸ்ட்                                    நாள் : 01.08.2017

## இராமநாதபுரம் மாவட்டம்

## 2016-2017-ஆம் கல்வியாண்டில் எலைட் சிறப்பு பயிற்சியில் பயின்று தமிழகத்தின் தலைசிறந்த பொறியியல் கல்லூரிகளில் கல்வி பயில இடம் கிடைத்துள்ள 19 மாணாக்கர்களுக்கு

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் புத்தகங்கள் வழங்கி பாராட்டினார்

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரத்தில் உள்ள வள்ளல் பாரி நகராட்சி நடுநிலைப்பள்ளி வளாகத்தில் இன்று (01.08.2017) மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், 2016-2017-ஆம் கல்வியாண்டில் எலைட் சிறப்பு பயிற்சியில் பயின்று தற்போது நடைபெற்று வரும் பொறியியல் பட்டப்படிப்புகளுக்கான கலந்தாய்வின் மூலம் அண்ணா பல்கலைக்கழகம் உள்ளிட்ட தமிழகத்தின் சிறந்த பொறியியல் கல்லூரிகளில் கல்வி பயில இடம் கிடைத்துள்ள மாணவர்களைப் பாராட்டி புத்தகங்களை வழங்கினார்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் அரசு பள்ளிகளில் பயின்று அதிக மதிப்பெண்கள் பெற்று சிறப்பாக செயல்படும் மாணாக்கர்களை மெருகேற்றும் வகையில், தகுதித் தேர்வு நடத்தப்பட்டு, அதன் மூலம் தேர்வு செய்யப்படும் மாணவ, மாணவியர்களுக்கு மீள்திறன் பயிற்சி வகுப்புகள் (ELITE Class) நடத்தப்பட்டு வருகின்றன. இராமநாதபுரத்தில் உள்ள வள்ளல் பாரி நகராட்சி நடுநிலைப்பள்ளியில் இச்சிறப்பு வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. 2016-2017 ஆம் கல்வியாண்டில் மொத்தம் 68 மாணவ, மாணவியர்கள் தேர்வு செய்யப்பட்டு கூடுதல் கவனம் செலுத்தி, சிறப்பு பயிற்சிகள், கூடுதல் தேர்வுகள் உள்ளிட்டவை நடத்தப்பட்டன.

இதன் மூலம் 2016-2017 ஆம் கல்வியாண்டில் நடைபெற்ற அரசு பொதுத் தேர்வில் எலைட் பயிற்சி பெற்ற மாணவர்களில் 18 மாணாக்கர்கள் 1100 -க்கும் அதிகமான மதிப்பெண்களும், 8 மாணாக்கர்கள் 1050-க்கும் அதிகமான மதிப்பெண்களும், ஒட்டு மொத்தமாக 68 நபர்களில் 63 மாணாக்கர்கள் 1000-க்கும் அதிகமான மதிப்பெண்களைப் பெற்றனர். அதனைத் தொடர்ந்து தற்போது நடைபெற்று வரும் பொறியியல் பட்டப் படிப்புகளுக்கான கலந்தாய்வின் மூலம் 19 மாணாக்கர்களுக்கு அண்ணா பல்கலைக்கழகம் (கிண்டி வளாகம்), அண்ணா பல்கலைக்கழகம் (எம்ஐடி வளாகம்) உள்ளிட்ட தமிழகத்தின் தலைசிறந்த பொறியியல் கல்லூரிகளில் சேர்ந்து கல்வி பயில இடம் கிடைத்துள்ளது.

இவ்வாறு பொறியியல் கல்லூரியில் சேர இடம் கிடைத்துள்ள மாணாக்கர்கள் இன்றைய தினம் இராமநாதபுரம் வள்ளல் பாரி நகராட்சி நடுநிலைப்பள்ளியில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்களை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர். மேலும் ஆசிரியர்கள் தங்களுக்கு சிறப்பாக பயிற்சி வழங்கிட ஏதுவாக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டமைக்காக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு மாணாக்கர்கள் நன்றி தெரிவித்தனர்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் சம்பந்தப்பட்ட மாணவர்களைப் பாராட்டி, புத்தகங்களை வழங்கி வாழ்த்து தெரிவித்தார். மேலும் நடப்பு கல்வியாண்டில் எலைட் பயிற்சி வகுப்பில் பயிலும் மாணாக்கர்கள் இதனை முன்னுதாரணமாக கொண்டு கடுமையாக உழைத்திட வேண்டும் என அறிவுரை வழங்கினார்.

இந்த நிகழ்வின் போது எலைட் சிறப்பு பயிற்சி ஒருங்கிணைப்பாளர் திரு.நவநீத கிருஷ்ணன் உடனிருந்தார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**